சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.109/2021

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ம் நாள் .வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | வயது | 72 |
| த/பெ | சுப்பைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காட்டூர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | ஓய்வு பெற்ற ஆசிரியர் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் அண்ணனான 1ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதி மீது பிராது 5-வது தபசில் சொத்தை பொறுத்து அவரது அனுபவத்தை இடைஞ்சல் செய்யக் கூடாது என மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.266/2018 என்ற வழக்கை தாக்கல் செய்து இருந்தார் என்றால் எனக்கு காலதாமதமாக தான் தெரிந்தது. அந்த வழக்கைப் பற்றி எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2020 அல்லது 2021 ம் ஆண்டு வாக்கில் தெரிய வந்தது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னரே மேற்கண்ட வழக்கு நிலுவையில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்த போது தான் தெரிய வந்தது. அ.வ.எண்.266/2018 வழக்கை பற்றி இந்த வழக்கின் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் அது அவர்கள் இருவருக்கும் இடையேயான வழக்கு என்பதால் பிராதில் குறிப்பிடவில்லை. அ.வ.எண்,.266/2018 என்ற வழக்கு இந்த வழக்கின் 5-வது தபசில் சொத்தை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அந்த வழக்கை மறைத்து வேண்டும் என்றே இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி யல்ல. பிராது 1 முதல் 3 இலக்க சொத்துக்கள் வானம் பார்த்த தரிசு நிலங்கள் என்றால் தரிசு நிலமாகவும் உள்ளது. விவசாய நிலமாகவும் உள்ளது. பிராது 1 முதல் 3

இலக்க சொத்துக்களில் விவசாயம் நடந்து வருவதை காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி தான். 1 முதல் 3 இலக்க சொத்துக்களில் எந்த விதமான விவசாயமும் நடக்க வில்லை என்றும் அதன் மூலமாக 1ம் பிரதிவாதிக்கு எந்த விதமான வருமானமும் வரவில்லை என்றால் சரி யல்ல. பிராது 5-வது தபசில் சொத்தானது 1ம் பிரதிவாதி செய்து வந்த காய்கறி வியாபரத்தின் மூலமாக வந்த வருமானத்தை வைத்தும் அவரது மனைவியின் நகைகளை விற்பனை செய்தும் வந்த பணத்தை வைத்து வாங்கப்பட்டது என்றால் சரி யல்ல. பிராது 1 முதல் 3 இலக்க சொத்துக்களின் மூலமாக 1ம் பிரதிவாதிக்கு வருமானம் வந்தது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். அந்த சொத்துக்களில் இருந்து எந்தவிதமான வருமானமும் வராததால் தான் அது பற்றிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி யல்ல. பிராது 5-ம்இலக்க சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சுய சம்பாத்திய சொத்து என்றும் அதனை இந்த வழக்கில் சேர்த்ததே தவறு என்றால் சரி யல்ல. 1ம் பிரதிவாதி எப்போதும் கூட்டு குடும்பத்தில் இருந்ததே இல்லை என்றும் கூட்டுக் குடும்பத்திற்கு சொத்துக்களே இல்லை என்றால் சரி யல்ல. பிராது 5-ம் இலக்க சொத்தை 1ம் பிரதிவாதி சுமார் 35 ஆண்டுகளுக்கும் மேலாக அவரது தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வருவதாலும் அந்த சொத்து 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்ய சொத்து என்பதாலும் அதில் பாகம் கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிராது 1 முதல் 3 இலக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு நில உடைமை பட்டாவின் அடிப்படையில் பாத்தியப்பட்ட தனித்த சொத்து என்பதால் அதிலும் நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரி யல்ல. பிராது 1 முதல் 3 இலக்க சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் அல்ல என்றும் அதில் யாரும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்ததில்லை என்றால் சரி யல்ல. பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்து உள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி யல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

Sd/-G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.